**செய்திவெளியீடு எண்:346** **நாள்:4.7.2009**

**பத்திரிக்கை செய்தி**

மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களின் அரசு, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறைக்கு ஒவ்வொரு ஆண்டும் கூடுதலாக நிதி ஒதுக்கி, ஏழை எளிய மக்களுக்கு சிறப்பான மருத்துவ வசதிகள் கிடைக்க பல பல திட்டங்களை உருவாக்கி செயல்படுத்தி வருகிறது. மருத்துவர்கள் மற்றும் மருத்துவம் சார்ந்த 20,856 பணியிடங்களை நிரப்பியும், மருத்துவமனைகளுக்கு ரூ.350 கோடி மதிப்பீட்டில் நவீன மருத்துவக் கருவிகளை வழங்கியும், புதிய கட்டிடங்கள் கட்டித் தந்தும், தரமான மருத்துவ வசதி அளிக்க இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

ஒரு மனிதன் உயிர் வாழ்வதற்கு, இரத்தம் எவ்வளவு முக்கியமானது என்பதை எல்லோரும் அறிவர். விபத்து காலத்திலும் மற்றும் பெண்களின் மகப்பேறு காலத்திலும் இரத்தம் உரிய நேரத்தில் கிடைக்காமல் பல உயிர் இழப்புகள் ஏற்படுகின்றன. இதை கருத்தில் கொண்டு இரத்தம் தங்கு தடையின்றி உடனடியாக உரிய நேரத்தில் கிடைக்கச் செய்ய இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் பாதுகாக்கப்பட்ட இரத்தம் கிடைக்கச் செய்ய இரத்த சேமிப்பு மையம் அமைக்கப்பட வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு, கடந்த ஆண்டு 130 மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் வட்ட மருத்துவமனைகளில் இரத்த சேமிப்பு மையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் 101 இரத்த சேமிப்பு நிலையங்கள் ரூ.4.37 கோடி செலவில் அமைக்க டாக்டர் கலைஞரின் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இது தவிர ஏழு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் இரத்த பகுப்பாய்வு மையம் ஏற்படுத்தப்பட்டன. நடப்பு ஆண்டில் எஞ்சிய ஏழு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் உள்ள இரத்த வங்கிகள், இரத்த பகுப்பாய்வு மைங்களாக ரூ.1.26 கோடி செலவில் மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் உரிமம் பெற்ற 83 அரசு இரத்த வங்கிகளும், 144 தனியார் இரத்த வங்கிகளும் மற்றும் மைய அரசின் நிலையங்களில் 11 இரத்த வங்கிகள் உள்ளன.

இவைகள் தவிர, சென்னை அரசு பொது மருத்துவமனைக்கு ஒதுக்கப்பட்டுள்ள மத்திய சிறைச்சாலை இடத்தில் ரூ.400 கோடி செலவில் ஒரு மிகப்பெரிய இரத்த வங்கியும், பகுப்பாய்வு மையமும் அமைக்கப்பட உள்ளது.

மேலும் இரத்த தானத்தை ஊக்குவிக்கவும், தன்னார்வ இரத்த கொடையாளர்களிடமிருந்து இரத்தம் பெறவும், எல்லா வசதிகளையும் கொண்ட நடமாடும் இரத்த வங்கி ரூ.50 இலட்சம் செலவில் சென்னை அரசினர் பொது மருத்துவமனைக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த அதிநவீன நடமாடும் இரத்த வங்கி கணினி மயமாக்கப்பட்டுள்ளது; முழுமையாக குளிர்சாதனம் செய்யப்பட்டுள்ளது; மேலும் இந்த வாகனத்தில் ஆறு படுக்கைகள் உள்ளது. ஒவ்வொரு ஞாயிறும் மாலை 4.00 மணி முதல் 8.00 மணி வரையில் மெரினா கடற்கரையில் இரத்ததான முகாம் நடத்தும் போது இரத்ததான விழிப்புணர்வு பற்றிய படம் எல்.சி.டி. புரஜக்டர் மூலம் காட்டப்படும். முதன்முறையாக இரத்த கொடையாளர்களுக்கு அடையாள அட்டை (Bar Code Card) வழங்கப்படுகிறது. இரத்த கொடையாளர்களுக்கு மின்னஞ்சல் மூலம் பிறந்த நாள் வாழ்த்து, அடுத்த இரத்தம் கொடை அளிக்கும் நாள் மற்றும் இரத்த பரிசோதனை அறிக்கையும் மின்னஞ்சல் மூலம் அனுப்பப்படும்.

ஒரு நாளைக்கு சுமார் 75 முதல் 150 யூனிட் வரை இரத்தம் சேகரிக்க முடியும். 100 யூனிட் இரத்தம் சேமித்து வைக்க குளிர் சாதன பெட்டிகள் உள்ளன. இந்த வாகனத்தில் மெல்லிசை வசதியும் ஆறு கொடையாளர்கள் உட்கார்ந்து சாப்பிடும் அளவிற்கு வசதியும் உள்ளன. இரண்டு 15 கே.வி.ஏ. ஜெனரேட்டர்கள் உள்ளது. 250 லிட்டர் கொள்ளவு கொண்ட தண்ணீர் தொட்டி உள்ளது. வாகனத்தின் உட்புறம் எவர்சில்வர் தகட்டால் உருவாக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட நவீன வசதிகளைக் கொண்ட சென்னை அரசினர் பொது மருத்துவமனையின் நடமாடும் இரத்த வங்கியை மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் இன்று (04.07.2009) துவக்கிவைத்தார். இந்த நிகழ்ச்சியின் போது மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை முதன்மைச் செயலாளர் திரு வி.கு. சுப்புராஜ், இ.ஆ.ப. மற்றும் துறையின் உயர் அதிகாரிகள் உடன் இருந்தனர்.

********

**வெளியீடு:இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**